சனவரி 13, 2007

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். இன்று காலையில் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் இணைந்து நடத்திய மதுரை மாரத்தான் ஓட்டம் மற்றும் நடைப்பயணங்களில் கல்லூரி, பள்ளி மாணவர்கள் உட்பட பொதுமக்கள் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மதுரையின் நீர்நிலைகளைக் காக்கும் விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பிய வண்ணம் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் கலந்து கொண்டது பொதுமக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் காலை 9.00 மணிக்கு, பொதுமக்கள் மற்றும் மதுரைப் பிரபலங்கள் கலந்து கொண்ட நடைப்பயணத்தை மதுரை மாநகரக் காவல் துறை ஆணையர் திரு.எம்.சிதம்பரசாமி, இ.கா.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.உதயசந்திரன், நீரியல் வல்லுநர் திரு.பழ.கோமதிநாயகம் ஆகியோரும் கொடியசைத்து ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தனர். பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவியர், உழவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு நீர்நிலைகள் காக்க முழக்கம் எழுப்பிய வண்ணம் சென்றனர். ஏறக்குறைய இருபதாயிரம் பேர் கலந்து கொண்ட இந்த நடைப்பயணம் மதுரை மருத்துவக்கல்லுரி மைானத்தில் காலை 10.30 மணிக்கு முடிவடைந்தது.

சரியாக காலை 8.00 மணியளவில் குறுகிய தூர ஓட்டம் மற்றும் ரோலர் ஸ்கேட்டிங் ஓட்டங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.T.உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஹைடெக் அராய் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் B.T.பங்கேரா, கனரா வங்கி இணைப் பொது மேலாளர் திரு.S.V.கிருஷணமூர்த்தி, தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் திருமதி.இராமுஉமையாள் ஆகியோரும் ஓட்டத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர். ஏறக்குறைய 15 ஆயிரம் மாணவர்கள் 8 கிமீ. தூரத்தை 1 மணி நேரத்தில் கடந்தனர். அறுநூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாற்றுத் திறனுடையோர் நடைப்பயணத்தை மடீட்சியா தலைவர் திரு.கிருஷ்ணமூர்த்தி தொடங்கி வைத்தார். தென்காசி அமர்சேவா சங்கத்தின் நிறுவனர் திரு.இராமகிருஷ்ணன், லைகோ (அரவிந்த் கண் மருத்துவமனை) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.துளசிராஜ் ஆகியோரும் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

ஓட்டம் மற்றும் நடைப்பயணங்களில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் மேடையில் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். "மதுரையின் நீர்வளத்தைக் காப்பதற்காக திரட்டப்பட்ட இந்நிகழ்வு நிச்சயம் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டு வரும். நீர்நிலைகளைக் காக்க எங்களால் இயன்றதை கண்டிப்பாகச் செய்வோம்" என்பதை உறுதிமொழியாகவே அனைவரும் தெரிவித்தனர். அவனியாபுரம் நையாண்டி மேளக்காரர்களின் கரகாட்டமும், மதுரை ஸ்கேட்டிங் அசோசியேசனின் ஸகேட்டிங் பரதநாட்டிய நிகழ்ச்சியும், களஞ்சிய இயக்கப் பாடகர்கள் திரு.வேங்கையன், திரு.பெருமாள்சாமி குழுவினரின் பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றன. நடைப்பயணத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய மதுரை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு.எம்.சிதம்பரசாமி, "நீரின்றி... என்ற தலைப்பில் மதுரையின் நீர்நிலைகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள நூல் அற்புதமான தகவல் களஞ்சியம். இதனை மாணவர்கள் முழுவதுமாய்ப் படித்து மதுரை குறித்து தெளிந்தறிய வேண்டும். தண்ணீரைப் பார்த்து ஓடிய காலம் போய், தண்ணீருக்காக ஓடும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று பேசினார். மதுரை மாரத்தான் நிகழ்வுகளில் பங்கேற்ற அனைவருமே நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களும் அவர் தம் குழந்தைகளுமே ஆவர். இது எந்த மாரத்தான் நிகழ்விலும் காண முடியாத ஒன்று. அது மட்டுமின்றி மனமுவந்து நீர்நிலைப் புனரமைப்பிற்கு நன்கொடையும் வழங்கியுள்ளனர்.

மதுரையின் நீர்நிலைகளைப் புனரமைக்க சுயஉதவிக்குழுக்களின் அமைப்பான களஞ்சியம் மற்றும் உழவர்களின் அமைப்பான வயலக இயக்கங்கள் தலா ரூ.50 ஆயிரத்தை நன்கொடையாக வழங்கியுள்ளன. இது தவிர செல்லூர், மதுரை, கரும்பாலை, ஜெய்ஹிந்துபுரம்,

தென்மதுரை வட்டாரக் களஞ்சிய அமைப்புகள் ஒவ்வொன்றும் அடுத்த ஓராண்டிற்குள் தலா இரண்டு நீர்நிலைகளைத் தத்தெடுத்து புனரமைப்புச் செய்ய உறுதியெடுத்துள்ளன. மதுரையைச் சுற்றியுள்ள கோவில் குளங்களை தத்தெடுத்துப் பராமரிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் கண்காட்சியில் பொதுப்பணித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை மாநகராட்சி, தியாகராசர் பொறியியற் கல்லூரி, களஞ்சியம் உள்ளிட்ட பல்வேறு சுயஉதவிக்குழு கூட்டமைப்புகள் கலந்து கொண்டுள்ளன. நீர்நிலைகளின் அவசியத்தை வலியுறுத்தி அமைக்கப்பட்ட புகைப்படங்களும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. பிற்பகல் 4.00மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை பல்வேறு நாட்டுபுறக் கலைக்குழுவினர் பங்கேற்கும் கரகாட்டம், ஒயிலாட்டம், பறையாட்டம், தேவராட்டம், மயிலாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. அமெரிக்கன் கல்லூரி, வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, டாடாதானம் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்லூரி மாணவர்களின் தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வு நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. பெருந்திரளான அளவில் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

கனரா வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ.வங்கி, நபார்டு, பிர்லா சன் லைஃப் (Birla Sunlife), வாட்டர் ஃபார் லைஃப் பௌண்டேசன் (Water for Life Foundation), ரவுண்ட் டேபிள் (Round Table), லதா மாதவன் பாலிடெக்னிக் கல்லூரி, டி.வி.எஸ.மேநிலைப்பள்ளி, அமெரிக்கன் கல்லூரி, ஹைடெக் அராய் உள்ளிட்ட நிறுவனங்களின் பங்களிப்போடு மதுரை மாரத்தான் நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெற்றுள்ளன.

மதுரை மாரத்தான் நிகழ்வுகளை ஒருங்கிணைத்த தானம் அறக்கட்டளை, மதுரையின் நீர்நிலைகளைக் காக்க சிறப்புத் திட்டங்களை வகுத்து, மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. நீர்நிலைப் புனரமைப்பு மையம் (Centre for Renovation of Waterbodies) ஒன்றை உருவாக்கவும், தற்போது நடைபெற்ற மாரத்தான் நிகழ்வின் பதிவுக் கட்டணத்தை, முழுவதுமாக தண்ணீர் தொடர்பான மாதிரி மையங்களைத் (Model Centres) தோற்றுவிக்கவும் முடிவெடுத்துள்ளது. தானம் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்டுள்ள களஞ்சியம் மற்றும் வயலக மக்கள் நிறுவனங்கள், தண்ணீர்ப் பாதுகாப்பு, நீர்நிலை புனரமைப்பு தொடர்பான பல்வேறு முயற்சிகளைத் தொடங்கவும் உறுதியெடுக்கப்பட்டுள்ளது. 1.அருகிலிருக்கும் நீர்நிலைப் பராமரிப்பு 2.வரத்துக்கால்வாய்கள், போக்குக்கால்வாய்களைப் பாதுகாத்தல் 3.தண்ணீர்ப் பாதுக்காப்பிற்கென்றே தனி நிதி உருவாக்கி உரிய வகையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய 2007ஆம் ஆண்டை தண்ணீருக்கான ஆண்டாக இந்திய அரசு அறிவித்துள்ளதோடு, பொது மக்களின் அனைத்துத் தரப்பினருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. அதன் முன்னோட்டமாக நடைபெற்ற மதுரை மாரத்தான், மதுரையின் வளத்திற்கு பெரும் பங்காற்றும் என நம்புகிறோம்.

நன்றி

மதுரை மாரத்தான் ஒருங்கிணைப்பு குழு

# மதுரை மாரத்தான் 2007

சனவரி 14, 2007

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். மதுரை மாரத்தான் 2007 எதிர்பார்த்த அளவிற்கு மேல் மிகப் பெரும் வெற்றியைத் தந்துள்ளது. முழுமையாய்க் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஏறக்குறைய 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்பதை மாரத்தான் ஒருங்கிணைப்புக் குழு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. நேற்று மாலை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கலைவிழாவில் பொதுமக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர். மாரத்தான் நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெற்ற பள்ளி, கல்லூரி மாணாக்கருக்கான கட்டுரை, வாசகம் எழுதுதல், ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு களஞ்சியம் இயக்கத் தலைவி சின்னப்பிள்ளை பரிசுகள் வழங்கினார். வெற்றி பெற்றோர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாரத்தான் நிகழ்வின் வெற்றிக்குப் பாடுபட்ட நிறுவனங்களும், அவர்தம் பங்களிப்பும் பின்வருமாறு: மதுரையின் நீர்த் தொன்மை குறித்த 'நீரின்றி...' என்ற நூலுக்கு ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியும் (ICICI Bank), பங்கு பெற்ற அனைவருக்கும் வழங்கப்பட்ட தொப்பியை கனரா வங்கியும் (Canara Bank) நன்கொடையாக வழங்கின. ஓட்டம் மற்றும் நடை பாதைகளில் மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு ரவுண்ட டேபிள் (Round Table) அமைப்பு தண்ணீர் வழங்கியது. லதா மாதவன் பாலிடெக்னிக் கல்லூரி (Latha Mathavan Polytechnic College), கருமாத்தூர் அருளானந்தர் (Arulanandhar College) கல்லூரிகள் தங்களது மாணவர்களை, கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபடுத்தின. மதுரை இராசாசி மருத்துவமனை (Government Rajaji Hospital) உறைவிட மருத்துவர் (Residential Medical Officer) திரு.மதிவாணன் தலைமையிலான அரசு மருத்துவர் குழு காயமுற்றோருக்கு தேவையான முதலுதவிகளைச் செய்தது. விவேகாநந்தா ஹெல்த் மிஷன், விக்ரம் மருத்துவமனை, மகாத்மா டிரஸட், ஹோமியோபதி மருத்துவ அமைப்பான 'நலம்' (NALHAM) உள்ளிட்ட மருத்துவ அமைப்புகள் மருத்துவ சேவையை மேற்கொண்டன. மாநகரக் காவல்துறை தகுந்த பாதுகாப்பு அளித்ததோடு, பொது மக்களுக்கு இடையூறு நேரா வண்ணம் போக்குவரத்தினையும் ஒழுங்குபடுத்தியது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நகருக்குள் சிறப்புப் பேருந்துகளை இயக்கியது. கண்காட்சி அரங்குகளுக்கான பொறுப்பை நபார்டு (NABARD) ஏற்றுக் கொண்டது. கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வுப் போட்டிகளை அமெரிக்கன் கல்லூரியும், பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளை டி.வி.எஸ. மெட்ரிக்குலேஷன் பள்ளியும் ஒருங்கிணைத்தன. மதுரையின் அனைத்து நாளேடுகள் மற்றும் உள்ளூர்த் தொலைக்காட்சிகள் மாரத்தான் குறித்த செய்திகளை சரியான நேரத்தில் வெளியிட்டு மக்களையும், மாணவர்களையும் திரட்டுவதில் பெரும் பங்காற்றியிருந்தன. குறிப்பாக தினமணி, இந்து, தினமலர் ஏடுகள், தண்ணீர் மற்றும் நீர்நிலைகள் குறித்த சிறப்புச் செய்திகளை கடந்த ஒரு மாத காலத்தில் வெளியிட்டு மக்களின் கவனத்தை மாரத்தான் பக்கம் திருப்பியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர பிர்லா சன் லைஃப் (Birla Sun life), நெதர்லாந்து நாட்டு நிறுவனமான வாட்டர் ஃபார் லைஃப் பௌண்டேஷன் (Water for Life Foundation)., மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் (MKU NSS), தியாகராசர் பொறியியற் கல்லூரி (TCE), மதுரை மாவட்ட நிர்வாகம் (District Administration), பொதுப்பணித்துறை (PWD), குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) உள்ளிட்ட அரசுத் துறைகளும், மதுரை மாநகராட்சியும் (Madurai Corporation) மாரத்தான் வெற்றிக்குப் பங்காற்றியுள்ளன. ஹைடெக் அராய் (Hi Tech Arai), மற்றும் களஞ்சிய (Kalanjiam Movement), வயலக இயக்கங்கள் (Vayalagam Movement) நீர்நிலைப் புனரமைப்பு நன்கொடையினை வழங்கியுள்ளன. நிகழ்வினை ஒருங்கிணைத்த தானம் அறக்கட்டளை (DHAN Foundation), இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு மாரத்தான் ஓட்டத்தை நடத்தத் தற்போது உறுதியெடுத்துள்ளது. நீர்நிலைப் பராமரிப்பிற்கான தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்து மக்கள் அமைப்புகளின் பங்கேற்போடு செயல்படுத்த திட்டம் வகுத்தள்ளது. மதுரையில் உள்ள அனைத்து அமைப்புகளும் இதில் பங்கேற்கும் பட்சத்தில் மதுரையின் நீர்வளத்தை மீட்டெடுக்க இயலும் என்பதையும் தானம் அறக்கட்டளை தனது வேண்டுகோளாக முன் வைக்கிறது.

நன்றி

மதுரை மாரத்தான் ஒருங்கிணைப்பு குழு